# கிருபையினால் இரட்சிப்பு

*எபேசியர் 2:5ல் நாம், “அக்கிரமங்களில் மரித்தவர்களாயிருந்த நம்மைக் கிறிஸ்துவுடனே உயிர்ப்பித்தார்; கிருபையினாலே இரட்சிக்கப்பட்டீர்கள்” என்று வாசிக்கின்றோம். வேதவசனங்களில் கிருபைக்கு மாபெரும் முக்கியத்துவம் தரப்பட்டுள்ளது. இது மறுபடியும் மறுபடியும் குறிப்பிடப் படுகின்றது. பவுலின் எழுத்துக்களில் மட்டும் “கிருபை” என்ற வார்த்தை எண்பத்தெட்டு முறை காணப்படுகின்றது. உண்மையில் நாம் கிருபையினாலே இரட்சிக்கப்பட்டோம் என்று கூறுமளவுக்கு புதிய ஏற்பாடானது இதனை முக்கியமானதாகக் கருதுகின்றது. நமது வேத பாடப் பகுதியும் இதனை அறிவிக்கின்றது. ரோமர் 3:24ல் பவுல், “இலவசமாய் அவருடைய கிருபையினாலே ... நீதிமான்களாக்கப்படுகின்றோம்” என்று கூறினார்.*

## *கிருபையின் அர்த்தம் என்ன?*

*“கிருபை” என்றால் “கருணை காட்டுதல்” என்று அர்த்தப்படுகின்றது. நமது பகுதியில் நாம் தகுதியற்றவர்களாய் இருந்த பொழுதே நாம் தேவனு டைய கருணையினால் இரட்சிக்கப்படுகின்றோம். மனிதன் தனது சுய துன்மார்க்கத்தினால் தன்னையே (தேவனிடத்திலிருந்து) பிரித்துக் கொண்டான் (ஏசா. 59:1, 2; ரோமர் 3:23). அவன் தேவனோடு ஒப்புரவாகு வதற்குத் தன்னால் ஒன்றும் செய்ய முடியாதவனாக இருந்தான். மன்னிப்பைப் பெறத் தகுதியான ஏதொன்றையும் அவன் செய்ய முடியாதிருந்தது. இருந்தாலும், மனிதன் மன்னிக்கப்படுவதற்கு ஒரு வழியை அருளும் அளவுக்குத் தேவன் மனிதனை அன்புகூர்ந்தார். தேவன் அந்த வழியை அருளுவதற்குச் செய்த யாவும் “கிருபை” என்ற வார்த்தையில் முற்றிலும் உள்ளடக்கப்பட்டுள்ளது. அதில் மிகச் சரியாக உள்ளடங்கியுள்ளது என்ன?*

*(1) தேவனுடைய அன்பின் ஈவான கிறிஸ்து உள்ளடக்கப்பட்டுள்ளார். நீதிமானாக்கப்படும் மாபெரும் திட்டமானது தேவனுடைய சிந்தையில் தொடக்கம் பெற்றது. பின்பு அது அவருடைய குமாரனில் வடிவம் பெற்றது. அவரே கிறிஸ்தவ அமைப்பின் மையமாக, நமது விசுவாசத்தின் கருத்துப் பொருளாக, நமது நம்பிக்கைகளின் நங்கூரமாக இருக்கின்றார். தேவன், இயேசுவைப் பாவத்திற்கு நிவாரணப் பலியாகக் கொடுக்குமளவுக்கு இந்த உலகத்தாரின் மீது அன்புகூர்ந்தார் (யோவா. 3:16; 1 யோவா. 2:2). தேவனு*

டைய கிருபையே அவர் தம் குமாரனான இயேசுவை இவ்வுலகிற்கு ஒப்புக் கொடுக்கும்படி அவரைத் தூண்டியது.

(2) கிறிஸ்துவின் இரத்தம் உள்ளடக்கப்பட்டுள்ளது. எபி. 9:22; 1 யோவா. 1:7 மற்றும் எபே. 1:7 ஆகிய வசனப் பகுதிகள், அவர் சிந்திய இரத்தத்தின் மூலம் பாவமன்னிப்பு/மீட்பு உண்டாயிற்றென்று கூறுகின்றன. இது முற்றிலும் ஒரு தெய்வீக செயலாக இருந்தது. மனிதன் இந்தப் பலிக்குத் தகுதியானவனல்ல; இது கிருபையாயிருந்தது. அவர் நம்முடைய இடத்தை எடுத்துக் கொண்டு, நமக்காக மரித்தார்.

(3) பரிசுத்த ஆவியானவரும், மனமாற்றத்தில் அவரது செயலும் ''கிருபை'' என்ற வார்த்தையில் அறியப்படுகின்றன(ர்). நாம் ஆவியானவராலே நீதிமான்களாக்கப்படுகின்றோம் (1 கொரி. 6:11). அப்போஸ்தலர்கள் மற்றும் ஏவுதல் பெற்ற மற்ற மனிதர்கள் ஆகியோர் மூலமாக ஆவியானவர் சுவிசேஷத்தை உலகத்திற்கு அளித்தார். சுவிசேஷத்தின் மூலமாக ஆவியானவர் பாவிகளை மனம்மாற்றுகின்றார் (எபே. 6:17).

(4) சுவிசேஷம் இரட்சிக்கின்றது (ரோமர் 1:16). பாவிகளை இரட்சிப்பதற்கான தேவனுடைய பங்கில் சுவிசேஷத்தின் செய்தியானது நிச்சயமாகவே உள்ளடக்கப்பட்டுள்ளது. மனிதருக்கான தேவனுடைய கருணை அல்லது கிருபையில் அது உறுதியாகவே உள்ளடக்கப்பட்டுள்ளது.

இந்தக் கூறுகள் ஒவ்வொன்றும் கிருபையின் அமைப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளது. தேவன், கிறிஸ்து, பரிசுத்த ஆவியானவர், சுவிசேஷம் மற்றும் இவர்கள் ஒவ்வொருவராலும் பாவிகளை இரட்சிப்பதில் செய்யப்படும் செயல் ஆகிய யாவும் "கிருபை" என்ற கருத்தில் அணைந்து/தழுவியிருக்கின்றன(ர்).

## கிருபையினாலே மட்டுமே இரட்சிப்பா?

"கிருபையினாலே மட்டுமே இரட்சிப்பு உண்டாகின்றதா?" என்று நாம் கேட்கும் பொழுது, "இரட்சிப்பு என்பது பரலோகத்தின் முயற்சிகளை மட்டுமே சார்ந்துள்ளதா?" என்று தான் அர்த்தப்படுத்துகின்றோம். சிலர் இவ்விதமாகவே உரிமைகோரியிருக்கின்றார்கள். விஷயம் அப்படியிருந்தால், பின்வரும் இரு முடிவுகளில் ஒன்று பெறப்பட வேண்டியிருக்கும்: ஒன்று தேவன் எல்லா மக்களையும் இரட்சிப்பார் அல்லது அவர் ஒரு சிலரை மட்டும் தேர்ந்து கொண்டு, எவ்வித நிபந்தனையுமின்றி அவர்களை இரட்சிப்பார். "கிருபையினாலே மட்டும்" இரட்சிப்பு என்ற கருத்தானது, உலகத்திலுள்ள எல்லாருமே இரட்சிக்கப்படுவோம் என்ற கருத்தை ஏற்றுக் கொள்ளும்படி நம்மை வற்புறுத்துகின்றது அல்லது முன் குறித்தல் மற்றும் எவ்வித நிபந்தனையற்ற இரட்சிப்பு ஆகியவற்றை நம்பும்படிக் கூறுகின்றது. இந்த உபதேசங்கள் ஒவ்வொன்றும் மதரீதியான மக்களால் போதிக்கப்பட்டாலும், இவை இரண்டுமே மறுக்க முடியாத அளவுக்குத் தவறானவையாகும். சிலர் இழந்து போகப்படுவார்கள் என்று வேதாகமம் தெளிவாகப் போதிக்கின்றது

*(மத். 7:13). அவர் நிபந்தனையின்றிச் சிலரைத் தேர்வு செய்து மற்றும் மனம் போனபடி மற்ற யாவரையும் தண்டனைக்குள்ளாக்குவார் என்று கூறுவது, தேவன் பட்சபாதமுள்ளவரென்று குற்றம் சாட்டுவதாகும், இதை தேவன் செய்வதில்லை என்று வேதாகமம் கூறுகின்றது (ரோமர் 2:11). "கிருபையினால் மட்டும்" என்ற உபதேசம் உண்மையானதாக இருக்க முடியாது.*

## கிருபையினால் இரட்சிக்கப்படுவது யார்?

*தேவனுடைய கிருபையை அல்லது கருணையை ஏற்றுக் கொள்கின்றவர்கள் கிருபையினால் இரட்சிக்கப்படுவார்கள். எந்த ஒரு ஈவும் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும். நாம் ஏதேனும் சிலவற்றைச் செய்ய வேண்டியதாயிருந்தால், கிருபையினாலே இரட்சிப்பு உண்டாவது எப்படி என்பதைச் சிலரால் புரிந்து கொள்ள முடிவதில்லை. இருந்தபோதிலும், நாம் காணப் போகின்றபடி இது உண்மையாகவே இருக்கின்றது.*

*இயற்கையிலிருந்து ஒரு எளிய விளக்கம் வருகின்றது. தேவனுடைய கிருபையினாலேயே நாம் உணவைப் பெறுகின்றோம். நாம் அன்றாட உணவுக்காகத் தேவனிடம் ஜெபிக்கின்றோம், மற்றும் அவரே அதைத் தருகின்றார் என்று விசுவாசிக்கின்றோம், ஆயினும் நமது பங்கை நாம் நிறைவேற்ற வேண்டும். நாம் நெற்கதிரை அறுத்து, அரிசியைப் பெற்று உணவை அதிலிருந்து சமைத்தாலும், அது தேவனிடத்திலிருந்து வருகின்ற ஈவாகவே இருக்கின்றது. நாம் இயற்கையின் வட்டாரத்தில் தேவனுடைய விதிகளுக்கு இணங்குவதன் மூலம் இந்த ஈவைப் பெறுகின்றோம்.*

*நோவாவுக்கு கர்த்தருடைய கண்களில் "கிருபை" கிடைத்தது என்று ஆதி. 6:8 நமக்குத் தெரிவிக்கின்றது. நோவா தப்பிப்பதற்கான ஒரு திட்டத்தைத் தேவன் அவருக்கு அளித்து, அதை அவருக்கு வெளிப்படுத்தினார். அது கருணை அல்லது கிருபையின் விஷயமாய் உள்ளது. இருப்பினும் நோவாவின் பங்கு தேவையாய் இருந்தது; அவர் பேழையைக் கட்ட வேண்டியதாய் இருந்தது. எபிரெயருக்கு நிருபம் எழுதியவர் அறிவித்தது போல, அவர் விசுவாசம் மற்றும் கீழ்ப்படிதலினால் இரட்சிக்கப்பட்டார் (எபி. 11:7).*

*யோசுவா 6:2ன்படி, எரிகோ நகரமானது கர்த்தரால் இஸ்ரவேலர்களுக்குக் கொடுக்கப்பட்டது. அது கிருபையினால் தரப்பட்ட ஈவாக இருந்தது. இருப்பினும், அந்த நகரத்தை எப்படி எடுத்துக் கொள்வது என்று அவர்களுக்குக் கூறப்பட்டது, அவர்களின் பகுதியில் ஒரு வாரம் செயல்பட்டுத்தான் தேவன் அவர்களுக்குக் கொடுத்திருந்த அந்த நகரத்தை அவர்கள் எடுத்துக் கொண்டார்கள். கிருபை என்பது கீழ்ப்படிதலின் தேவையை எடுத்துப் போடுவதில்லை.*

*மீண்டும் நமது வேதபாடப் பகுதியைக் கவனியுங்கள். எபேசியர்கள் கிருபையினால் இரட்சிக்கப்பட்டதாகப் பவுல் கூறினார். அவர்களின் மனமாற்றத்தைப் பற்றி நாம் அப். 19ல் விரிவாகப் படிக்க முடியும். அவர்களின் மனமாற்றத்தில் பவுலினால் சுவிசேஷம்*

பிரசங்கிக்கப்பட்டதென்ற மனிதக் கருவிப் பயன்பாடு ஈடுபடுத்தப்பட்டதைக் காண முடியும். அதற்கு விசுவாசமும் ஞானஸ்நானமும் தேவைப்பட்டது, அந்த நிகழ்ச்சியை பின்னோக்கிப் பார்த்த பவுல், அவர்கள் கிருபையினால் இரட்சிக்கப்பட்டதாகக் கூறினார். அவர்களின் விஷயத்தைப் பற்றி நாம் படித்து, கிருபையினால் எவ்விதம் இரட்சிக்கப்பட முடியும் என்று அறிய முடியும்.

மேற்கண்ட நிகழ்ச்சிகள் ஒவ்வொன்றிலும் கிருபையினாலே ஆசீர்வாதத்தைப் பெற முடிந்தது எவ்விதம் என்பதையும், இருப்பினும் அந்த நபரின் பங்கு இன்னும் அவசியமாகும் என்பதையும் நாம் காண முடிந்தால் நமது பகுதியில் கீழ்ப்படிதலின் சில செயல்பாடுகளைப் புறக்கணிக்காமல் நமக்குக் கிருபையினால் இரட்சிப்பு கிடைக்கின்றது என்பதை நாம் ஏன் ஏற்றுக் கொள்ள முடியாது? நாம் இரட்சிக்கப்படுவதற்கு செய்ய வேண்டியவைகளாகத் தேவன் கட்டளையிட்டவைகளைச் செய்த பிறகும் கூட இன்னமும் அது கிருபையின் விஷயமாகவே உள்ளது. கீழ்ப்படிதலின் எளிய செயல்களினால் நாம் இரட்சிப்பை ஈட்டிக் கொள்ளுகின்றோம் என்று நாம் நிச்சயமாகத் திருப்தியடைய முடியாது.

இரட்சிப்பு கிருபையினாலே உண்டாகின்றது; நாம் தகுதியுள்ள செயலெதுவும் செய்து அதனால் இரட்சிப்பை ஈட்டிக் கொள்வதில்லை. தேவன் கட்டளையிட்ட யாவையும் செய்த பிறகும் கூட நாம் அப்பிரயோஜனமான ஊழியக்காரர்களாவே இருக்கின்றோம் (லூக். 17:10). கீழ்ப்படிதலுள்ள விசுவாசத்தினால் தேவனுடைய கருணை நமக்குப் பொருத்தமாக்கப்பட்டாலும், நாம் விசுவாசித்துக் கீழ்ப்படியும் போது ‘‘ஆச்சரியமான கிருபை! அதன் ஒலி எவ்வளவு இனிமை!’’ என்று அப்பொழுதும் நாம் பாட முடியும்.